## முக்கிய சுருக்க ஆவணம்

நீங்கள் HSBC லை.ஃப்ஸ்டைல் கடன் ஒன்றிற்கு விண்ணப்பித்து எம்மில் நம்பிக்கை வைத்தமைக்காக உங்களுக்கு நன்றி. தெளிவான மற்றும் வெளிப்படையான செயன்முறையை உறுதிப்படுத்துவதற்காக, தனிப்பட்ட கடன்/கள் தொடர்பான முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகளை நாம் கீழே தந்துள்ளோம். அவற்றை வாசித்து விளங்கிக்கொள்ள நீங்கள் சிறிது நேரத்தைச் செலவிட முடியுமானால் நாம் நன்றியுடையவர்களாக இருப்போம்.

HSBC லை.ஃப்ஸ்டைல் கடன்/கள் தற்சமயம் தற்போதய HSBC வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன.

| **HSBC லை.ஃப்ஸ்டைல் கடன்களுக்கான தகுதி நிபந்தனைகள்** | **தேவையான ஆவணங்கள்** |
|---|---|
| நீங்கள் 18 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன், | அடையாளச் சான்று (தே.அ.அ.) |
| நீங்கள் இலங்கையில் வசிக்கும் ஓர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். | வருமானச் சான்று (மிகச் சமீபத்திய சம்பளச் சீட்டு போன்ற ஏதேனுமொன்று) |
| தற்போதய HSBC வாடிக்கையாளர்களுக்கு: வாகன அலவன்ஸ் நீங்கலாக, இ.ரூ.100,000/- ஐ நிகர ஊதியமாகச் சம்பாதிக்க வேண்டும் (குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் இ.ரூ.50,000/-). | வங்கி அறிக்கைகள் (சம்பளம் வரவு வைக்கப்பட்ட வங்கியிலிருந்து கடைசி 3 அறிக்கைகள்) |
| தொழிலில் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்க வேண்டும் (தகுதிகாண் நிலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் |
| | திருமணச் சான்றிதழ் (கூட்டு விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்) |
| | வேறேதும் ஆதார ஆவணங்கள் (தேவையான சகல ஆவணங்களின் பூரண பட்டியலுக்குத் தயவுசெய்து விண்ணப்பப் படிவத்தைப் பார்க்கவும்) |

- கடனின் அங்கீகாரம் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட், இலங்கைக் கிளையின் (“HSBC/ Bank”) தனித் தற்றுணிபைப் பொறுத்ததாகும்.
- உங்கள் கடன் விண்ணப்பம் HSBCக்கு கிடைத்த பின், தேவையான சகல ஆவணங்களும் ஒழுங்காக இருக்கும் பட்சத்தில், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வழமையாக குறைந்தபட்சம் ஒரு (1) வங்கி வேலை நாள் எடுக்கும்.

- கடன் விண்ணப்பம் HSBCயினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில், கடன் விண்ணப்பத்தையும் அதனுடன் இணைக்கப்பட்ட சகல ஆவணங்களையும் அழித்துவிட HSBC உரிமை கொண்டுள்ளது.
- கடனின் அங்கீகாரம் (ஆனால், அது மட்டுமல்ல) உள்ளிட்ட சகல விடயங்களிலும் வங்கியின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாக இருக்கும்.
- உங்கள் கடன் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டால், மாதாந்தக் கடன் தவணைத் தொகையை மீட்பதற்கான நிலையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டதும், வங்கியானது கடனை வரவிலிடத் தொடங்கும்.
- நீங்கள் மிதப்பு (மாறுபடக்கூடிய) வட்டி வீதத்தை அல்லது கடன் காலம் முழுவதற்குமான நிலையான வட்டி வீதத்தைத் தெரிவு செய்யலாம். மிதப்பு வட்டி வீதங்கள், சந்தை வட்டி வீதத்திற்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் முறையில் காலத்திற்குக் காலம் மாற்றத்திற்கு உட்படும். நிலையான வட்டி வீதங்கள், கடனின் முழுக் காலப்பகுதிக்கும் (ஆகக்கூடியது 5 ஆண்டுகள்) நிலையாக இருக்கும்.
- குறைந்துசெல்லும் மீதி அடிப்படையிலா அல்லது சமமான தவணைத் தொகைகள் அடிப்படையிலா கடனை மீளச் செலுத்துவது என்பதைத் தெரிவு செய்யும் விருப்பத்தேர்வு உங்களுக்கு உள்ளது.
- கொடுப்பனவைச் செலுத்த வேண்டிய திகதி ஒரு விடுறையாக இருந்தால், அடுத்த வங்கி வேலை நாளில் கொடுப்பனவைச் செலுத்த வேண்டும்.
- முழுக் கடன் தவணைத் தொகையும் உரிய திகதியில் செலுத்தப்படாவிட்டால் அல்லது உரிய திகதிக்கு முன், உரிய திகதியில் அல்லது அதற்குப் பின் பகுதிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டால் அல்லது உரிய திகதிக்குப் பின் முழுக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டால், தாமதக் கட்டணம் அறவிடப்படும்.
- சட்டம் அல்லது பிரமாணத்தினால் தேவைப்படுத்தப்பட்டபடி, நாம் உங்களுடைய கடன் தரவுகளை இலங்கைக் கொடுகடன் தகவல் பணியத்துடன் மற்றும்/அல்லது வங்கியினால் அவசியமெனக் கருதப்படும் வேறேதும் ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்வோம்.
- சகல தனிப்பட்ட கடன் வாடிக்கையாளர்களும், இக் கடன் விண்ணப்பத்துடன் உங்களுக்கு வழங்கப்படும் கடன் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
- இந்த ஆவணம் உங்கள் வசதிக்காகவே வழங்கப்படுகின்றது என்பதையும் லை∴ப்ஸ்டைல் கடன் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள HSBC லை∴ப்ஸ்டைல் கடனின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடு செய்யவோ மற்றும்/அல்லது மாற்றியமைக்கவோ மாட்டாது என்பதையும் தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும். இங்கு

குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கடன் விண்ணப்பத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின், கடன் விண்ணப்பத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளே சரியானவையாக மேலாதிக்கம் செலுத்தும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுக்கும் HSBC விதிப்பனவுகள் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கும் இடையே முரண்பாடு காணப்படின், HSBC விதிப்பனவுகள் கையேடே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும்.

- உங்கள் தனிப்பட்ட கடன் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, எமது வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள எமது விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் விதிப்பனவுகள் கையேட்டையும் பார்க்கவும்.

| | |
|---|---|
| குறைந்தபட்ச/அதிகபட்ச கடன் தொகை | ரூ.500,000/- மற்றும் ரூ.7,500,000/- |
| நெகிழ்வான கடன் விதிமுறைகள் | 6 மாதங்கள் தொடக்கம் 60 மாதங்கள் வரை |
| கட்டணங்கள் | **செயற்படுத்தல் கட்டணம்**<br>Personal Loan Amount — Processing Fee<br>Rs. 1 Million and below — Rs. 4,500/-<br>Over Rs. 1 Million — Rs. 7,000/-<br><br>**தனிப்பட்ட கடன்களின் முன்கூட்டிய/பகுதி தீர்ப்பனவு (மிதப்பு வீதம்)**<br>இ.ரூ.10,000 என்ற குறைந்தபட்ச கட்டண நிபந்தனைக்கு உட்பட்டதாக முன்கூட்டிய கொடுப்பனவுத் தொகையின் 3%. (இரண்டில் எது கூடியதோ அத் தொகை)<br><br>**தனிப்பட்ட கடன்களின் முன்கூட்டிய/பகுதி தீர்ப்பனவு (நிலையான வீதம்)**<br>முன்கூட்டிய தீர்ப்பனவுக்கு நிலுவைப் பெறுமதியில் 4% அல்லது பகுதித் தீர்ப்பனவுக்கு செலுத்திய தொகையில் 4%.<br>.<br><br>**தாமதக் கொடுப்பனவுக் கட்டணம்**<br>தவணைத் தொகையின் மீது வழமையான வட்டி வீதத்தைவிட 2% அதிகம்.<br><br>கவனிக்கவும் - விதிப்பனவுகள் பட்டியலுக்கு அமைவாகவே அறவீடுகள் பிரயோகிக்கப்படும். (https://www.hsbc.lk/tariffs/) |

**உங்கள் கருத்துகளை அல்லது முறைப்பாடுகளை எமக்குத் தெரிவிக்க விரும்பினால், தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளவும்.**

நாம் வழங்கும் சேவைகள் குறித்து உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது அச் சேவைகள் உங்கள் தேவையை ஈடுசெய்யவில்லையெனின், தயவுசெய்து இயன்றளவு விரைவாக பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

- +94 114 511 566 என்ற வாடிக்கையாளர் தீர்வுகள் உடனடித் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக
- customersolutions@hsbc.com.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக
- தபால் முகவரி:<br>வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்,<br>சிற்றளவு விநியோகம் மற்றும் செல்வ முகாமைத்துவம்,<br>இல. 24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01.

நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரலாம். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் -- இலங்கை

- முகவரி : 143A, வஜிரா வீதி, கொழும்பு 05.
- தொலைபேசி : + 94 112 595 625
- தொலைநகல் : + 94 112 595 624
- மின்னஞ்சல் : info@financialombudsman.lk
- வலைத்தளம் : www.financialombudsman.lk

HSBC|Loans|KFD|May-2024 (T)